**செய்தி வெளியீடு எண்: 06/2022** **நாள்: 18.02.2022**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் முதல் கட்ட விரிவாக்கத்தில் மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு**

மெட்ரோ இரயில் பாதுகாப்பு ஆணையர் திரு. அபய் குமார் ராய், (பெங்களூரு வட்டம்), தலைமையில் திரு. எம். என். அத்தானி (முதன்மை தனிச் செயலாளர்), துணை ஆணையர்கள் திரு. இ. ஸ்ரீனிவாஸ் (சமிக்கை), திரு. நிதிஷ் குமார் ரஞ்சன் (தொழில்நுட்பம்) மற்றும் மூத்த தொழில்நுட்ப ஆய்வாளர் திரு. என். ஜி. பிரசன்னா ஆகியோர் மெட்ரோ இரயில் பணிகளை ஆய்வு செய்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் முதல் கட்ட விரிவாக்கத்தில் எஞ்சியுள்ள திருவொற்றியூர் தேரடி மெட்ரோ இரயில் நிலையம் மற்றும் விம்கோ நகர் பணிமனை மெட்ரோ இரயில் நிலையங்களை இக்குழுவினர் இன்று (18.02.2022) ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின்போது, மெட்ரோ இரயில் நிலையத்தின் உட்புறத்தோற்றம், பல்வேறு கட்டுமானப் பணிகள், இயக்க முறைகள், நடைபாதைத் தீயணைப்பு செயல்பாடு, காற்றோட்ட வசதி, நீர் உறிஞ்சு ஏற்பாடுகள், அளவீடுகள், பயணிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள், அவசரத் தொலைபேசி வசதிகள், அறிவிப்புப் பலகைகள், மின்தூக்கிகள், நகரும் படிக்கட்டுகள், இரயில் தண்டவாளத்தின் அமைப்பு மற்றும் சமிக்கை (சிக்னல்) அமைப்பு போன்றவை ஆய்வு செய்யப்பட்டு ஆவணங்களும் மதிப்பாய்வு செய்யப்பட்டன.

இந்த ஆய்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., இயக்குநர் திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), தலைமைப் பொது மேலாளர்கள் திரு. எஸ். அசோக் குமார் (தடம்), திரு. பி. எஸ். ஸ்ரீனிவாஸ் (நடுவம் / ஒப்பந்த மேலாண்மை) திரு. டி. லிவிங்ஸ்டோன் எலியாசர் (திட்ட திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**